com NAANAYAM VIKATAN VOLUME: 16 ISSUE:51
₹25 (தமிழ்நாடு, புதுச்சேரி)
₹30 (மற்ற மாநிலங்களில்)
நாணயம் விகடன்
பணத்தைப் பெருக்கும் தாரக மந்திரம்
21.11.21



கு.ஆனந்தராஜ்

# உள்ளூரில் உற்பத்தி... வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி! 'ஒளிரும்' சென்னைப் பெண் ஷர்மிளா..!

'கே லைட்ஸ்' நிறுவனத்தின் நிறுவனரான திலீப் கும்பட், 4,000 ரூபாய் முதலீட்டில் வெறும் நான்கு ஊழியர்களுடன் அந்த நிறுவனத்தைத் தொடங்கினார். தற்போது அது ஆண்டுக்குப் பல நூறு கோடி டேர்ன் ஓவர் வர்த்தகத்தைச் செய்துவருகிறது!



ஷர்மிளா கும்பட்



வீடுகள் முதல் தெருக்கள் வரை எல்லா இடங்களிலும் வெளிச்சம் பாய்ச்சும் மின் விளக்குகளின் பயன்பாடு அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாக மாறிவிட்டது. ஆனால், நம் நாட்டுக்கான பயன்பாட்டுத் தேவையில் 90% மின் விளக்குகள் வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதியாகின்றன என்பது வருத்தமான உண்மை. இந்தியாவில் இந்தத் துறையில் மிகக் குறைவான அளவிலேயே இருக்கும் உற்பத்தி நிறுவனங்களில், சென்னையைச் சேர்ந்த 'கே-லைட் இண்டஸ்ட்ரீஸ்' (K-Lite Industries) நிறுவனம் முக்கியமானது. பல்வேறு சவாலான சூழல்களையும் கடந்து, 40 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளூர் விற்பனை முதல் வெளிநாட்டு ஏற்றுமதி வரை அசத்திவருகிறது இந்த நிறுவனம்.

இதன் நிறுவனரான திலீப் கும்பட், 4,000 ரூபாய் முதலீட்டில் வெறும் நான்கு ஊழியர்களுடன் தொடங்கிய இந்த நிறுவனம், தற்போது ஆண்டுக்குப் பல நூறு கோடிக்கும் அதிகமான வர்த்தகத்துடன் வீறுநடை போடுகிறது.

திலீப்பின் நான்கு மகள்களும் தற்போது வெவ்வேறு துறைகளில் தொழில்முனைவோர்களாகச் செயல்படுகின்றனர். இரண்டாவது மகள் ஷர்மிளா கும்பட், 'கே-லைட்' நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக மொத்த நிர்வாகப் பொறுப்புகளையும் கவனித்து வருகிறார். சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டையிலுள்ள இந்த நிறுவனத்தின் உற்பத்திக்கூடத்தில் ஷர்மிளாவைச் சந்தித்தோம். தனக்கென தனி அறையைப் பயன்படுத்தாமல், ஊழியர்களுடன் ஊழியராகத் திறந்தவெளி இருக்கையில் பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்தவர், நிறுவனத்தின் வெற்றிக்கதையை உற்சாகத்துடன் நம்முடன் பகிர்ந்துகொண்டார்.

"என் பெற்றோர் இருவரும் படித்தவர்கள். எனவே, படிப்பின் அவசியம் புரிந்து நான்கு மகள்களையும் நன்கு படிக்க வைத்தனர். அப்பாவுக்கு பிசினஸ்தான் முதல் குடும்பம். அதற்காகத் தினமும் 18 மணி நேரம் வரை உழைப்பார். என் சிறு வயதில் ஓய்வுநேரங்களில் அப்பாவுடன் இந்த நிறுவனத்தில் தான் உலவிக்கொண்டிருந்தேன்.

பள்ளிப் படிப்பு முடித்ததும் பேஷன் டிசைனிங்